உ

மீனாக்ஷி துணை.

# அங்கயற்கண்ணி யருட்பாமாலை.

இஃது

சிவகங்கை வடக்கரண்மனையில் இருக்கும்

கற்றவர்க்குதவு நற்றவக்குரிசிலாம்

மகா-ள-ள-ஸ்ரீ டில்லிபாச்சா துரையவர்கள்

விருப்பின்படி

வேம்பத்தூர்ச் சங்க வித்வான்களிலொருவராகிய

ஆ. சு. சுப. பாலசுப்ரமண்ய பாரதியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

7-NOV 1930

மதுரை,

ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1930. [அணா 0-2-0.

உ

மீனாக்ஷி துணை.

# அங்கயற்கண்ணி யருட்பாமாலை.

இஃது

சிவகங்கை வடக்கரண்மனையில் இருக்கும்

கற்றவர்க்குதவு நற்றவக்குரிசிலாம்

மகா-ள-ள-ஸ்ரீ டில்லிபாச்சா துரையவர்கள்

விருப்பின்படி

வேம்பத்தூர்ச் சங்க வித்வான்களிலொருவராகிய

ஆ. சு. சுப. பாலசுப்ரமண்ய பாரதியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

மதுரை,

ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1930. [அணா 0-2-0.

சிவமயம்.

# இந்நூலுள் அடங்கியவை.


1. நூற்பயன்—ஸ்ரீனிவாசவாண்டவன்.
2. முகவுரை—தி. இராமாநுஜமையங்கார்
3. சிறப்புப்பாயிரம்—மு. முத்துவேங்கடாசலம்
4. சாற்றுக்கவிகள்—1. சிவசுப்பிரமணிய ஐயர்
   ,, 2. பழனிக்குமாரு பிள்ளை.
5. நூல்.




NOV 1930

உ

சிவமயம்.

# நூற்பயன்.

---

இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்ச் செல்வியாகிய மீனாக்ஷியி னிவ்வருட்பா மாலையைக் காலையில் ஸ்நானம் செய்து விபூதி தரித்து அன்புடனே பாராயணஞ் செய்தவர்கள், அவ் வங்கயற்கணம்மையருளால் சகல துன்பமும் நீங்கப்பெற்றுப் புத்திர உற்பத்தியோடு செல்வமுடையவராய் விளங்கி இந் நிலவுலகத்து வாழ்வார்கள்.

ஸ்ரீநிவாச வாண்டவன்,

கோயிற்பட்டி.

ஸ்ரீ

# முகவுரை.

---

## நேரிசை வெண்பா.

நீலமிடற் றோன்வளரும் நிம்பைப் பதியினில்வாழ்
பாலசுப்ர மண்யனெனும் பாரதியும்—கோலமுற
அங்கயற்கண் ணம்மை யருட்பா வியற்றினனால்
எங்குளதிந் நூலுக் கிணை.

திருமிகுத்த பெருமிதத்தாற் காலமயக்கிற் கட்டுண்டு, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையோர் தெய்வமிகழ்ந்து அச்சிந்தனை சிறிதேனுமிலராய், வாய்வந்தன பிதற்றித் திரியுமிக்காலத்து, 'ஆக்க அழிக்க வல்லனும் அறவாணன் ஒருவனுளன்' என்னும் உணர்வுடை உத்தமர் ஒருசிலரே யாவர். அத்திறப் பட்டோரும், பழவினைப் பயத்தாற் பல்வள மிழந்த பான்மையராய காலத்தன்றிப், பொலிவுறு செல்வம் நீடியகாலைப் போற்றிப் பணிந்தனர் என்பதனை யாம்மெய்யாக் கண்டவாறில்லை. நிற்க,

"இயலானதுகொண்டுநின்றிருநாமங்களேத்துதற்குமுயலாமை யாற்றமோறுகின்றேன்" என்று, புவிபுகழ் புலமைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார், கூறியவாங்கு அளப்பில் பல்குணத்திறைவனை மீசனைப் பாவகையதனாற் பற்றிப் பரசலே சாலச்சிறப்புடைப் பத்தி நெறி என்பது பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் ஒரு பெருங் கொள்கை.

அம்முறைக் கியைய நம்முன்னோரியற்றிப் போந்த நூல்கள் பலவுள. பின்னோரிட்டவும் எண்ணற்றன. இஃதிவ்வாறாக,

வழிவழியாக் கவிபுனையும் வன்மை வாய்ந்து வீறிவிளங்கும் புலவர் பெருமக்கள் குழுவினருள் தலைசிறந்தவராக முதற்கண்ணே வைத்தெண்ணப் படுபவர் வேம்பத்தூரார் என்பதனை யாண்டும் யாவரும் மறுக்கமுற்படார் என்பது என்றுணிபு. இனி,

இந்நூலுடையராம் நம் பாரதியாரவர்களும் அத்தகைய மரபின் வழிவந்த சந்ததியாராதலின் அன்னவர் பெருமையென்போலியரால் எடுத்துரைக்கும் பெற்றித்தன்று. இவர் தமக்குற்ற ஓய்வு நேரங்களை வீணே கழியாமே, பற்பல பாக்கள் புனைவதில் பேரூக்கம் கொண்டவர் என்பதனை யானறிய இடமுண்டு.

கூடலின் கண்ணே கோயில்கொண்டருளிய அங்கயற்கண்ணியைப் பாவாற்பாடிப் பதம்பெறும் பேரவாக்கொண்டு அங்கயற் கண்ணி யருட்பாமாலை என்னும், இந்நூலை யியற்றியுள்ளதாகத் தெரிகிறது.

இதன் வயினிலவும் சொற்பொருள் நயங்கள், படிப்போர்பலராலும் கண்கூடாகக்காணத் தகுவதொன்றன்றி நாக்கொண்டு நவிலும் நடுத்தர முடைத்தன்று. எனினும், இரண்டொரு கவிகள் என் திருந்திய சிந்தையைத் திறைகொண்டன. அவ்வாறு தன்பாற்பணியச் செய்த தனிப்பெருஞ் சீருடைக்கவிகளில்,

கச்சியினி லிங்கங் கருமணலிற் ருபித்துப்
பச்சிளங்கொங் கைச்சுவடு பற்றிடவே—உச்சிதமாய்
எம்பிரான் விட்டநதி யெட்டிவரவுந் தழுவு
மம்பிகைமீ ளுக்ஷி யருள்.

என்பது ஒன்று.

தானின்புறுவ உலகின்புறக் கண்டு மகிழ்வதே தனது சீரிய நோக்கமாகக்கொண்டு, தான்பாடி யநுபவித்ததனோடமையாது உலகிற்கும் உபயோகமாம்படி பரோபகார்த்தமாக இதனை வெளியிட்ட நம் ஆசிரியரது பெருந்தன்மை கற்றறிந்த பெரியோர் பலராலும் போற்றற் பாலது.

15, கிருஷ்ணராயர் தெப்பக்
குளத் தெரு, மதுரை.
20—9—30.

இங்ஙனம்,

தி. இராமாநுஜையங்கார்.

## சிறப்புப்பாயிரம்.

இஃது,

மதுரைத் தமிழ்ச்சங்க மாணவன்,

மு. முத்துவேங்கடாசலம்

இயற்றியது.

### நிலைமண்டில வாசிரியப்பா.

நீராழி சூழ்ந்த நிலவல யத்துக்
காயாம் பூநிறக் கண்ணன தருளால்,
நிலைபெற் றுலவி நிற்குமன் பதைகளு
ளாரறி வதனை யருமையி னடைந்து
மாய பயனை யனுபவித் திலரா
யலமரு மனத்த ரளவிலர்; உலகிற்
கேளாது வந்து கிளையொடு தோன்றித்
தங்கு மிடத்தினைத் தருவி னமைத்துப்
பறந்து நீங்குறூஉம் பறவை மானத்
தத்தம் யாக்கை தமரிடத் திருப்ப
வாளா செல்லுதல் வாய்மை யல்லதூஉங்
கண்கூ டாகக் கண்டதொன் றன்றே;
செய்வினை யிரண்டவர் செல்லுழிப் பற்றலின்
புண்ணிய வினையே புரிந்திட லழகால்,
ஆதலிற் பாரினுக் கன்னையைத் துதித்து
நல்வினை யதனை நாட்டினு ளியற்றி
ஞாலத் துயிரெலா நற்பய னுறவே
சீவன் முத்தித் திருத்தல மதனிற்
சுருதியுந் தேருச் சுந்தரன் றனக்குப்
பொன்னரி மாலிகை மின்னரி யாசன

னன்னயம் பொருந்த நல்கிய செல்வி,
தடமீன் யாவுந் தஞ்சிறு மீனிடை
யளவிலாக் கருணை யளித்திடு மதுபோல்,
உயிர்க ளிடத்தே வுலப்பிலா விருப்புங்
கருணையு நிரம்புங் கண்ணிணை பூண்ட
அங்கயற் கண்ணிமீ தருட்பா மாலை
பல்வகைச் சுவையும் பயின்றிட வந்தணர்
பாவகை யதனாற் பகர்ந்தனன்; யாரெனிற்
றோன்றிற் புகழொடு தோன்றுக வென்னும்
பொய்யில் புலவன் பொருளுரை போற்றித்
தன்வயி னுதித்தோர் தமையெஞ் ஞான்றும்
புகழ்ச்சி யுறச்செயும் பொற்பினி திலங்கி
விழுத்தகு சிறப்புடை வேம்பற் றூரினிற்
சுந்தரன் பயந்த சுகுணன் பால
சுப்பிர மணியனுஞ் சொல்வன் மையனே.

## சாற்றுக் கவிகள்.

---

இஃது,
திருக்கயிலை வித்வான்,
ப்ரஹ்ம்மஸ்ரீ சிவசுப்ரமண்ய ஐயர் அவர்கள்
இயற்றியது.

நேரிசை வெண்பா.

செம்பொருளை நாடுந் தெருளுடையார்க் கின்புதவு
மம்பிகைமீ னாக்ஷி யருள்வெண்பா—நிம்பைவரும்
பாலசுப்ர மண்யப்பேர்ப் பாவலவன் பாடினான்
சீலவிற்ப னத்திற் சிறந்து.

இஃது,
சோழவந்தான்,
ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்,
மகா-௱-௱-ஸ்ரீ க. பழனிக்குமாரு பிள்ளை
இயற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

தென்றமிழ்க் கூடற் றெய்வமா நகரி
லென்றும் புகழுட னினிதா யமர்ந்து
பணிவார் பவவினை பரிவுட னகற்றித்
தணியா வறநெறி தான்மிக வளர்க்கு
மங்கையர்க் கரசியா மங்கயற் கண்ணியின்
பங்கய மனைய பாதத் துணைக்கே
பாவலர் புகழருட் பாமாலை யொன்று
நாவலர் மகிழ நயந்துசூட் டினனால்;
இம்பரி லிசைமிகு நிம்பைப் பதியின
னன்மைசா றவநெறி நான்மறை யவர்குலச்
சுந்தர னீன்ற சுகுணநற் புதல்வன்
பால சுப்பிர மணியனும் பாரதி
கண்ணிய மொடுபுகழ் கவிவல் லோனே.

### காப்பு.

புங்கவர்கொண் டாடிப் புகழருட்பா மாலைதனைச்
சங்கரிமீ னாக்ஷியின்மேற் சாற்றிடவே—மங்களமாய்த்
தும்பிமுகம் பெற்றடியார் துன்பமதை நீக்கவரு
மம்பிகையின் பாலா வருள். (1)

## கடவுள்வாழ்த்து.

### சுப்பிரமணியர்.

மாரனெனச் சொற்றலுறு மாமறையோன் பாசுரத்திற்
சாரனுறக் குற்றமெனச் சாதித்த—கீரனுக்கு
நீங்காத நோயதனை நீக்கியுப தேசஞ்செய்
காங்கேயா வெந்தனையுங் கா. (2)

பாபமதைப் பாறுதல்செய் பாலகனுன் சுற்றிவருந்
தாபமதை யுந்தெரியாத் தாதையெனக்—கோபமதாய்
மாங்கனிக்கா வன்றுதினம் மாபழனி யூரமருங்
காங்கேயா வெந்தனையுங் கா. (3)

மாதவருங் கண்டுவக்கும் மாறந்த குஞ்சரியாம்
மாதவளு மின்பமுற மாநிலத்தோர்—பாதவமாந்
திங்கதையுந் தீர்க்கத் திருப்பரங்குன் றத்திலமர்
காங்கேயா வென்றனையுங் கா. (4)

கற்றறிவில் லாதவெனைக் கண்ணருள்செய் சண்முகனென்
அற்றவரை யாதரிக்கு முண்மையனே—நிற்றலுறு
மஞ்சைலத் தண்ணலரு மன்புடன்வந் தேத்திடுஞ்சீர்
விஞ்சையினைத் தந்தருளு வி. (5)

### சோக்கலிங்கர்.

கல்லானை முத்தாரங் கைக்கொள்ளக் காவலவன்
சொல்லாளர் மோதவருஞ் சொக்கேசா—பொல்லாத
தெம்பினரை வாட்டிடச்செய் தென்னவன்மீ னாக்ஷியெனு
மம்பிகைமேற் பாட வருள். (6)

### மதுவர்ணீசர்.

விண்டுவுக்கு மேன்மைதரும் வித்தகனு நற்சுகனைக்
கண்டுபணிந் தேத்தக் கருத்திலுனி—அண்டரெலாம்
வண்டாகிப் போற்றலுறும் வண்மதுவர் ணீசுரனே
தண்டாத செல்வமதைத் தா. (7)

### திருமால்.

வண்டிசைக்குஞ் சோலைமலை வந்தவர்தங் குற்றத்தைக்
கண்டித்து நன்மைதருங் கள்ளழகா—பண்டிதனுய்
எத்திசையுஞ் சீர்த்தியுற வென்றனையுஞ் செய்வித்துச்
சுத்தமொடு வாழவிருத் து. (8)

### சம்பந்தர்.

முத்தமிழார் கன்னி முலைப்பாலை யுண்டமண
ரெத்தலத்து மேக்கமுற வேடதனை—நித்தமுநீ
ரெத்திடும்வை கைத்துறையி லிட்டகுணச் சம்பந்த
வத்தனெனு மூர்த்தியெனை யாள். (9)

### நாவுக்கரசர்.

செப்பாத நீதியெலாஞ் செப்பச்செய் வன்சமணர்
வெப்பான நீற்றறையில் வேகவிடத்—தப்பாதே
வப்பெனவே யாக வரனடியைத் தோத்தரித்த
வப்பரெனுந் தேவே வருள். (10)

### சுந்தரர்.

பன்னூலுங் கூறலுறும் பஞ்சவித லக்ஷணமு
னன்னூலு மார்பரவை நாச்சியிடந்—தொன்னூல்செய்
சுந்தரனைத் தொண்டுபுரி சுந்தரனே யிக்கணத்து
வந்ததுயர் நீக்கியருள் வாய். (11)

### மாணிக்கவாசகர்.

மன்னவனுக் கன்று மதுரைச்சோ மேசனையுஞ்
சொன்னகுதி ரைக்குவிலை சொல்லிடச்செய்—நன்னயமார்
மன்னுதிரு வாசகஞ்செய் மாணிக்க வாசகனே
என்னையுநீ காத்தருள்வை யே. (12)

## நூல்.

கஞ்சமலர்ச் செல்வி கருணையொடு காதலுறு
நெஞ்சகத்தி னல்வினையை நேசித்து—வஞ்சகரைக்
கம்பிதங்கொள் ளப்பேசுங் கற்றவருக் கன்புதரு
மம்பிகைமீ னாக்ஷி யருள். (1)

தக்கன்றன் வேள்விதனிற் றங்கிடும்வா னத்தாரைத்
துக்கமுறச் செய்சோம சுந்தரனைப்—பக்கத்தே
நம்பினவர்க் கின்பமது நல்கிவர வேண்டலுறு
மம்பிகைமீ னாக்ஷி யருள். (2)

தொல்லைவினை யின்பயனாற் சொத்தையெலாந் தோற்றுமனத்
தில்லையெனுஞ் சோகத்தா லிங்கிதமாய்—வல்லையினில்
வெம்பிவரு கின்றவர்க்கு வேண்டியபொன் மேவுதல்செ
யம்பிகைமீ னாக்ஷி யருள். (3)

சொந்தமெனுந் தன்மனதைத் தோன்றுவழியே செலுத்திச்
சந்தமுறு முன்கோயிற் சன்னதியில்—வந்தனையா
றம்பிசகைக் கூறுமவர் தக்கதுயர் தீர்த்தலுறு
மம்பிகைமீ னாக்ஷி யருள். (4)

செங்கைவடி வேலவனைச் சென்றுபுவி யிற்கனக
மங்கைகணா வன்மகிழ மன்னிடச்செய்—கங்கையணி
சம்புவையுங் கூட்டித் தனியரசா ளும்மதுரை
யம்பிகைமீ னாக்ஷி யருள். (5)

கங்கையரன் பூசைக் கருத்துணர்ந்து செய்பட்டர்
செங்கைதனி லேபொன்னைச் சேர்ப்பித்துச்—சங்கையுறு
வம்பினருக் கென்றும் வரமுதவாச் சங்கரியா
மம்பிகைமீ னாக்ஷி யருள். (6)

வந்ததமர்க் கண்டவுடன் வாட்டமென்ப தின்றிநிதி
எந்தவுல கத்தாரு மேற்றலுறத்—தந்துதவு
நம்பியுந்தான் போற்றிவளர் நங்கைவள்ளி மாமியெனு
மம்பிகைமீ னாக்ஷி யருள், (7)

அந்திநிறத் தான்முடியி லர்ச்சனைசெய் தாமரையைச்
சிந்தித்துப் போற்றாத தீமையினா—னைந்துவருந்
தும்பியின்சா பந்தீர்க்குஞ் சுந்தரர்க்கு நாரியெனு
மம்பிகைமீ னாக்ஷி யருள். (8)

கச்சியினி லிங்கங் கருமணலிற் ருபித்துப்
பச்சிளங்கொங் கைச்சுவடு பற்றிடவே—வுச்சிதமா
யெம்பிரான் விட்டநதி யெட்டிவர வுந்தழுவு
மம்பிகைமீ னாக்ஷி யருள். (9)

உம்பருக்குத் தந்தமிர்த மூக்கமுறுந் தானவரைக்
கம்பமென நிற்றலுறக் கண்டித்துச்—சம்பத்தை
யம்புவியி லுற்றிடச்செ யச்சுதன்றன் றங்கையெனு
மம்பிகைமீ னாக்ஷி யருள். (10)

நூல் முற்றிற்று.

## வாழ்த்து.

பங்கயனும் வாழி பரம்பொருளுந் தான்வாழி
அங்கயற்க ணம்மை யருள்வாழி—தங்கிடுமிப்
புத்தகமும் வாழி புகழ்ந்திதனை ஓதிடுவா
ரெத்தினமும் வாழி யினிது.

அங்கயற்கண்ணி யருட்பாமாலை
முற்றிற்று.

ஸ்ரீ மீனும்பிகை பிரஸ், மதுரை.—1930—412—500.